MAH05650

ஸ்ரீ :

ஹரி : ஓம் :

பெருமாளுடைய லீலைகள் அத்புதமானது. அத்புதம்னா என்ன பரம போக்கியம். நல்ல போக்கியமான வஸ்துக்களை அனுபவிக்கும் போது நம்ம எப்படி சுகமா அனுபவிக்கறோம். நல்ல பசுநெய்யினால செய்யப்பட்டதான சர்க்கரை பொங்கல் சாப்பிடும் போது நமக்கு எப்படி போக்கியமா இருக்கும். போக்கியம்னா என்ன நல்ல அனுபவிக்கறது. சாதாரணமா புடிக்காத வஸ்துவ நம்ம தொடவே மாட்டோம். புடிச்ச வஸ்துவ திரும்ப கேட்டு வாங்கி சாப்பிடுவோம். அது தான் உடம்புக்கு மருந்து. உணவே மருந்து, மருந்தே உணவு. உடம்புக்கு மருந்து எதுன்னா உணவு தான் மருந்து. அதாவது ஒரு உடம்பு சரியாகணும்னா மருந்து சாப்பிடணும், அந்த மாதிரி நித்யம் உடம்பு சௌக்கியமா இருக்கணும்னா சாப்பிட்டா தான் இருக்கும், அதுனால தான் உணவே மருந்துனு சொல்றோம். இந்த உலகத்துலையே போதும்னு சொல்ற ஒரே வஸ்து உணவு தான். மற்ற எந்த வஸ்துவையும் இந்த உலகத்துல நம்ம போதும்னு சொல்றது இல்லை. பணம், நகை, தங்கம், வீடு, மாடு எதுவுமே நமக்கு எவ்வளோ கிடச்சாலும் போறாது. எவ்வளோ கிடச்சாலும் நமக்கு த்ருப்தி இருக்காது, போதும்னு சொல்லவே மாட்டோம். அப்ப இந்த உலகத்துலையே நம்ம போதும்னு சொல்ற ஒரே வஸ்து இந்த உணவு மட்டும் தான். எவ்வளோ சாப்பாடு தான் நம்மளால சாப்பிட முடியும். நம்ம வயத்துல எவ்வளோ கொள்றதோ அவ்வளோ தான் சாப்பிட முடியும். அதுக்காக காத்தால நான் சாப்பிடல, மத்தியான சாப்பாட்டுல அதையும் சேத்து சாப்பட்றேன்னு சொல்லிட்டு சாப்பிட முடியுமானா முடியாது. அதான் மனுஷ ஜென்மா, பகவானோட ஸ்ருஷ்டி. ஆகையால ஆழ்வார்கள்லாம் உண்ணும் சோறும் பெருமாளுக்கு சம்ம், ஆகையால த்ருப்தி ஏற்பட்றதா இல்லையா, மீதி எந்த வஸ்துக்களாலும் த்ருப்தி வராது, எல்லாம் அநித்தியமான வஸ்துக்கள். அப்ப உண்மையான போக்கியம் பகவான் மட்டும் தான், மீதி எல்லாமே அநித்யம் தான், அதுனால இதுல என்ன தாத்பர்யம்னா எல்லாருக்கும் உதவணும். அதாவது கண்டிப்பா நமக்கு தகுந்தா மாதிரி எல்லாருக்கும் உதவணும். நமக்கு ஒரு 100ரூபாய் கைல வந்தா அதுல ஒரு 10ரூபாயாவது அடுத்தவாளுக்கு உதவி பண்ண குடுக்கணும். இப்ப நம்ம ஆண்டவன் எவ்வளோ பெரிய பாடசாலை வெச்சிருக்கார், இதான் உண்மையான தர்மம். ஏன்னா பெருமாளோட சாநித்யம் இருக்கற இடம் வேதம், அந்த வேதத்த சம்ரக்ஷ்ணம் பண்றது பெரிய காரியம், ஒரு இடத்துல கோ சாலை, ஒரு இடத்துல பாடசாலை, இந்த இரண்டுமே நடக்கற இடம் இந்த ஸ்ரீரங்க க்ஷேத்திரத்துல தான், அது நம்ம ஆண்டவன் தான், அவரோட க்ருபை அபரிமித அத்புதமானது, எல்லாரும் ஆசாரியன் திருவடியே சரணம்னு இருப்பா, வேர ஒண்ணும் சொல்ல மாட்டா, ஆசாரியன் திருநாமம் சொல்லிண்டே இருப்பா, ஸ்ரீமதே ரங்க ராமானுஜ மஹா தேசிகாய நம : அத மட்டும் தான் சொல்லிண்டே இருப்பா, ஏன்னா அந்த நாமா க்கு அவ்வளோ பலம், அந்த நாமா எல்லா காரியத்தையும் செஞ்சு குடுக்கும், யாருமே செஞ்சு குடுக்க முடியாத காரியத்தையும் செஞ்சு குடுக்கும். தேவர்கள், ப்ருஹ்மா யாராலையும் செய்ய முடியாத காரியத்தையும், ஆசாரியனோட கடாக்ஷ்ம் பட்டா போதும் எல்லா காரியமும் சித்தமாகும், அதுனால் ஆசாரியன் தான் எல்லாருக்கும் உயர்ந்த தெய்வம், பெருமாளை விட யாரு முக்கியம் ஆசாரியன் தான். மதுரகவி ஆழ்வார் என்ன பண்ணார், நம்மாழ்வாரை கெட்டியா புடிச்சுண்டு இருந்தார்ல, அவர கெட்டியா புடிச்சுண்டு "கண்ணினுன் சிருத்தாம்பினால் கட்டுண்டப் பண்ணிய பெருமாயன், க்ருஷ்ணனை சொல்றது இல்லை, இவர தான் சொல்றா, நம்மாழ்வாரை புடிச்சுண்டார். ஆகையினால இந்த அத்புதமானது என்ன வேதம். அதே போல ஒரு க்ஷேத்திரத்தோட மாஹாத்மியத்த குடுத்தது யாரு ஆண்டவனோட க்ருபை, அது நமக்கு கிடைச்சதுனால தான் நம்ம இவ்வளோ பெரிய ஆளா இருக்கோம். என்ன காரியம் செஞ்சாலும் பெரியவாளை சேவிக்கலேன்னா நமக்கு எதாவது பலன் உண்டா. பெரியவாளை எதுக்கு சேவிக்கணும்னா 3 ஏற்படும், என்னன்னா புகழ், ஆயுள், வித்தை

எல்லாம் கிடைக்கும். அந்த ஆயுள்ல எதாவது பிரச்சனைனா, உடம்புல எதாவது பிரச்சனையா ஆசாரியன் திருநாமம் அல்லது அவரோட தனியன் சொன்னா போதும், அந்த திருநாம்ம் நம்மள காப்பாத்தும். இதான் உண்மை, சத்தியம், தர்மம். "ஆசார்ய : ப்ரதமோ தர்ம : " ஆசாரியன் தான் முதல் தர்மமே. ஆகையினால அத்புதம்னா என்ன, பகவான் க்ருஷ்னனோட லீலை எல்லாமே அத்புதமா இருக்கும், க்ருஷ்ணனை மதிக்காதவாளுக்கு அது விஷமா இருக்கும், க்ருஷ்ணனை தியானம் பண்றவாளுக்கு அது ரஸமா இருக்கும். கம்சனுக்கு க்ருஷ்ணன் விஷமா இருந்தான். சில மருந்து விஷமா இருக்கும், சில மருந்து தித்திப்பா இருக்கும், தித்திப்பா இருக்கற மருந்து விஷமா இருக்கு இல்லையா. அதுனால இந்த உலகத்துல எல்லாமே அநித்யம், எம்பெருமான் மட்டும் தான் நித்யம், அதான் உண்ணும் சோறும், சாப்பாடு சாப்பிட்டா த்ருப்தி ஏற்படும், மீதி எதுலையும் த்ருப்தி ஏற்படாது, ஆகையினால ஈஸ்வரனின் திருவடி பற்றுதல் மட்டும் தான் த்ருப்தி, ஏன்னா அது தான் ப்ருஹ்மம், அன்னம் தான் பகவானே. இப்ப ஸ்வாமி என்ன செஞ்ஜார் ஒரு ஊருக்கு போனார், போன இடத்துல என்ன பண்ணார், யாரோடையோ பேசிண்டே இருந்ததுல அந்த ஊர்ல இருக்கற கடைசி பஸ் தவற விட்டுட்டார், அப்ப அங்க வந்த யாரோ ஒருத்தர் வந்து ஏன் பதட்டமா இருக்கீங்க என்ன விஷயம்னு கேக்கறார், விஷயத்த சொன்னதும் அவர் பரவாயில்லை எங்க ஆத்துக்கு வாங்கோனு அவர அழச்சுண்டு போயி அவருக்கு கை கால் லாம் அலம்ப ஜலம் குடுத்து அவர உள்ள அழச்சுண்டு போயி, நல்ல நுணி இலையா போட்டு அவா என்ன சாப்பாடு வெச்சுருக்காளோ அத இவருக்கும் போட்றா, அந்த ஸ்வாமியும் நல்ல சாப்டுட்டு சௌக்கியமா இருங்கோனு சொல்லிட்டு காலைல கிளம்பி அவரோட ஊருக்கு பொயிட்றார். பல வருஷங்கள் கழிச்சு இந்த சாப்பாடு போட்டவா, வடக்கு பக்கம் க்ஷேத்திராடணம் போறா, போகும் போது வழி தெரியாம தத்தளிக்கும் போது இவர் எப்படி அந்த ஸ்வாமிய கூப்பிட்டு உபசாரம் பண்ணாரோ, அது மாதிரி அங்க இருக்கற யாரோ முன்னபின்ன தெரியாதவா கூப்பிட்டு இவாள ஒக்கார வெச்சு சாப்பாடு போட்டு உபசாரம்லாம் பண்ணாளாம், அப்ப நினைச்சு பாத்தாராம் நம்ம இப்படி தானே பல வருஷங்களுக்கு முன்னாடி ஒரு ஸ்வாமிக்கு உபசாரம் பண்ணோம், அந்த ஸ்வாமி பண்ண ஆசீர்வாதம் அனுக்ரஹம் தான் இன்னிக்கி நம்மள காப்பாத்தியிருக்கு, ஏன்னா அனுக்ரஹம் உடனே உடனே காப்பாத்தாது, எப்ப நம்ம கஷ்டப்பட்றோமோ அந்த சமயத்துல நம்மள காப்பாத்தறது தான் அனுக்ரஹம், அதே மாதிரி தான் சமயம் வரும் போது தான் எம்பெருமான் காப்பாத்துவான், அத பரீட்சை லாம் பண்ணி பாக்கக்கூடாது. அது ஸ்வயமா வரணும், எம்பெருமான் கிட்ட பக்தி செலுத்தி பெருமாளோட ப்ரீத்திக்கு பாத்திரம் ஆயிட்டா உங்களுக்கு எந்த கஷ்டமும் வராது. அவன் காப்பாத்துவான் "த்வயி ரக்ஷ்தி ரக்ஷ்கை கிமன்யை : " அப்படினு ஒரு வைராக்கியம் வந்துடணும். பகவான் க்ருஷ்ணன் காப்பாத்துவான் அப்படினு நம்பிக்கை இருக்கணும். திரௌபதி அப்படி தானே நம்பிண்டு இருந்தா. திரௌபதிய பெருமாள் காப்பாத்தாம விட்டுட்டாறா இல்லையே. முதலை வாய்ல மாட்டிண்ட கஜேந்திரன் ஆதிமூலானு கூப்டதும் காப்பாத்தினாரா இல்லையா, அதான் நம்பிக்கை. இதெல்லாம் நமக்கு ஒரு எடுத்துக்காட்டு. அதுனால தான் இந்த இந்து தர்மம் தழச்சதுக்கு காரணம் என்ன இதெல்லாம் நடந்துருக்கு, அது அனுபவப் படும் போது தான் தெரியும். அந்த மாதிரி நித்தியமான வஸ்து யாரு, நித்தியம் எது, அநித்தியம் எது, எம்பெருமான் திருவடியை தவிர மத்த எல்லாமே இந்த உலகத்துல அநித்தியம் தான். க்ருஷ்ணனுடைய திருவடியை பற்றுவது மட்டுமே நமக்கு நித்தியம். அவன் காப்பாத்துவான் அவனுக்கு அதானே வேலை. எல்லாரையும் காப்பாத்தறது தான் அவன் வேலை. ஒரு ஸ்வாமி என்ன செஞ்சார் அவர் ஆத்துல கரப்பான் பூச்சி வந்துடுத்து, அத நம்ம அடிச்சு கஷ்ட்ட படுத்தக்கூடாதுனு அத அப்படியே உயிரோட புடிச்சுண்டு போய் ஆத்துக்கு வெளிய கொண்டு போய் போட்டுட்டார். அப்ப அங்க இருந்த பூனை வந்து இந்த கரப்பான் பூச்சியை கவ்விண்டு பொயிடுத்து. இவர் இந்த கரப்பான் பூச்சியை காப்பாத்தணும்னு கஷ்டப்பட்டு வெளிய கொண்டு வந்து விட்டார், அதை மொத்தமா பூனை தூக்கிண்டு பொயிடுத்து. அன்னிக்கி அந்த பூனைக்கு

இந்த கரப்பான் பூச்சி இறையாகணும் அப்படிங்கறது, அப்ப எல்லாமே பெருமாளோட லீலை தான். அடுத்து ஜலம் வெச்சுருக்கற பாத்திரத்துல ஒரு பூச்சி விழுந்துடுத்து, அது அந்த தண்ணில ரொம்ப ஸ்ரமப்பட்டுண்டு இருக்கு, அப்ப நம்ம என்ன செய்யறோம், அந்த பூச்சியை வெளிய விட்றோம், விட்டதும் அந்த பூச்சி பறந்துடாது, ஒரு நிமிஷம் நிக்கும், அப்ப அதை காப்பாத்தினவன் அந்த பூச்சியை ஒரு முறை பாப்பான். பாத்துட்டு அப்பா காலைலயே ஒரு புண்ணிய காரியம் பண்ணிட்டோம், ஏன்னா ஒரு ஜீவனை காப்பாத்தறது தான் தர்மம். ஜீவ ஹிம்சை கூடாது. அதுக்காக எல்லா ஜீவனையும் காப்பாத்தறது நம்ம கடைமை இல்லை, ஆனால் எம்பெருமான் எல்லா லோகத்துலையும் இருக்கற எல்லா ஜீவனையும் அவனால காப்பாத்த முடியாதுங்கறதுனால தான் அவனுடைய ப்ரதிநிதியா எல்லாரையும் படச்சுருக்கான். சில பேர் காப்பாத்தாம தத்தளிக்கட்டும்னு பாத்துட்டு பொயிடுவா இல்லையா, அப்படிலாம் இருக்க கூடாது. காப்பாத்தணும்ங்கற எண்ணம் வந்து காப்பாத்தணும். அந்த உயிரை காப்பாத்தினதுனால இவனுக்கு எங்கையாவது ஒரு நாள் ஆபத்து நேரும் போது எம்பெருமானுடைய பாத்திரத்துக்கு ஆளாவான். இவனுக்கு ஆபத்து வரும் போது யாராவது ஒருத்தன் வந்து இவனை கப்பாத்துவான். அப்ப தெய்வம் மாதிரி வந்து என்ன காப்பாத்தின்னு சொல்லி நம்ம கைக்கூப்புவோமே அதான்.